என்ன நடக்கிறது தமிழ்நாட்டில்?

Sleep Mode-லிருந்து வெளியே வருவாரா முதலமைச்சர்?

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!



சென்னை,அக்.24-

என்ன நடக்கிறது தமிழ்நாட்டில்?

Sleep Mode-லிருந்து வெளியே வருவாரா முதலமைச்சர்? என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே நள்ளிரவில் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டு இருந்த குடும்பத்தினர் மீது மர்ம கும்பல் ஒன்று ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதில், மேரி ரெஜிலா என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொடூர தாக்குதலில் அந்தப்பெண்ணின் கணவரும், மகனும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்த பெண்ணின் 2 மகள்களையும் அந்தக்கும்பல் கடத்தியுள்ளது. சில மணி நேரத்துக்குப் பின்னர் அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுமட்டுமின்றி, வேளாங்கண்ணியில் வீட்டை விட்டு வெளியேறி வந்த 2 சிறுமிகளை விடுதியில் அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்த சம்பவமும், திருநெல்வேலியில் இருந்து வீட்டை விட்டு வெளியேறிய இன்னொரு சிறுமி கூட்டு பலாத்காரம் செய்யப்பட்ட கொடுமையும் நடந்திருக்கிறது.

மேலும், த.வெ.க.வின் கன்னியாகுமரி மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கிறிஸ்டோபர் என்பவர், கல்லூரி மாணவி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்த SofaModel ஆட்சி அமைந்தது முதல், ஆளுங்கட்சியில் பாலியல் குற்றவாளிகள் பிரிவு என்று ஒன்று ஆரம்பிக்கிற அளவுக்கு, பாலியல் குற்றவாளிகள் நிரம்பி வழிகிறார்கள்.

ஆனால், இவர்கள் யார் மீதும் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கைப் பார்ப்பது தான் முதலமைச்சரின் பெண்கள் பாதுகாப்பு லட்சணமா?

ஆட்சிக்கு வந்து 5 மாதங்கள் ஆகியும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டாமல் Reels Shoot செய்யும் Dum my CM, எப்போது தான் குற்றங்களைக் கட்டுப்படுத்து வார்?

இந்தக்குற்றச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் வகையில் ஆட்சியாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தை

உடனடியாக மறு ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

ஒன்றிய அரசுக்கு தயாநிதி மாறன் எம்.பி. அவசரக் கடிதம்!

புதுடெல்லி,அக்.24-

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்து, விலங்குகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப் படுத்தக் கோரி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட் டுதலின்படி கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. ஒன்றிய அரசை வலியுறுத்தி யுள்ளார். இதுகுறித்து ஒன்றிய மீன்வ ளம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் அவர்களுக்கு அவர் அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதா வது :

அறிவியல் ஆராய்ச்சிகளைச் சீர மைப்பது ஒரு நியாயமான நோக்க மாக இருந்தாலும், அதன் பெயரில் விலங்குகள் நலனுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவீனப்படுத்தப்ப டுவதோ அல்லது சுதந்திரமான ஒழுங் குமுறைக் கண்காணிப்பு குறைக்கப்படுவதோ கூடாது. பெரிய விலங்குகள் தொடர்பான பரிசோத னைகள் உட்பட, பரந்த அளவிலான பரிசோதனைகளுக்கு நிறுவனங்களின் நெறிமுறைக் குழுக்களே ஒப்புதல் அளிக்க அனுமதிக்கும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள மாற்றம், பொறுப்புக்கூறல் மற்றும் சுதந்திரமான ஆய்வின் போதுமான தன்மை குறித்து முக்கியமான கேள்வி களை எழுப்புகிறது.

மேலும், வனவிலங்குகள், தெரு நாய்கள் மற்றும் பூனைகளைப் பிடித்து ஆய்வகப் பரிசோதனைகளுக்குப் பயன்படுத்த வழிவகுக்கும் விலக்கு கள் குறித்தும் கவலைகள் எழுப்பப் பட்டுள்ளன. கடுமையான வலி, துன் பம் மற்றும் நீடித்த பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய பரிசோதனைகள், அத்துடன் ஆய்வு நடைமுறைகள் மற் றும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள நலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த கவலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த விதிகளை இறுதி செய்வதற்கு முன்பாக ஒரு முழுமையான மறு-ஆய்வு மேற்கொள் ளப்பட வேண்டும்.

அழகுசாதனப் பொருட்கள் சோதனை, மருத்துவக் கல்வி மற்றும் சில மருந்துப் பரிசோதனை முறைக ளில், விலங்குகளைப் பயன்படுத்தாத மாற்று வழிகளை அங்கீகரிப்பதில் இந் தியா ஏற்கனவே முன்னேற்றம் கண் டுள்ளது. மனித உயிரணுக்கள் சார்ந்த



ஆராய்ச்சி, மனித உறுப்புகளின் செயல்பாடுகளை கணினி சிப் வடி வில் உள்ளமைக்கும் அதிநவீன மருத் துவத் தொழில்நுட்பமான 'ஆர்கன் ஆன்சிப்' (organon chip) தொழில்நுட்பங்கள், மனித திசு மாதி ரிகள் மற்றும் கணினி வழி மாதிரி யாக்க முறைகள் (computational methods) போன்றவை, விலங்குகளைப் பயன்ப டுத்தும் சோதனைகளைக் குறைத்து, அறிவியல் முன்னேற்றத்தை ஊக்கு விக்க சிறந்த வாய்ப்புகளை வழங்கு கின்றன.

இந்தச் சூழலில், ஒன்றிய அரசு பின் வரும் நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு வலியுறுத்துகிறேன்:

1. தற்போது முன்மொழியப்பட்டுள்ள இந்த வரைவு விதிகளைத் திரும்பப் பெற்று, எவரையும் சார்ந்திராத விலங்கு நல நிபுணர்கள், விஞ்ஞானிகள், கால் நடை மருத்துவர்கள், ஆராய்ச்சி நிறு வனங்கள் மற்றும் சமூக அமைப்புகளு டன் கலந்தாலோசித்து, விரிவான மறுஆய்வை மேற்கொள்ள வேண் டும்.

2. விலங்குகள் மீதான பரிசோத னைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு குழு' (CCSEA) மூலம் மேற்கொள்ளப்படும் வலுவான சுதந் திரமான மேற்பார்வையை, தொடர்ந்து நடைமுறையில் வைத்தி ருக்க வேண்டும். குறிப்பாக, பெரிய விலங்குகளை உள்ளடக்கிய பரிசோத னைகள் மற்றும் கடுமையான வலி அல்லது துன்பத்தை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகளுக்கு இந்த மேற் பார்வை அவசியமாகும்.

3. வனவிலங்குகள் மற்றும் மனிதர் களோடு இணைந்து வாழும் விலங்கு களைப் பிடிப்பதற்கோ அல்லது ஆய் வகச் சோதனைகளில் பயன்படுத்துவதற்கோ வழிவகுக்கும் தெளிவற்ற விலக்குகளை நீக்குவதன் மூலமும், எந்தவொரு விதிவிலக்குகளும் துல்லியமாக வரை யறுக்கப்பட்டு, சட்டப்பூர்வமாக நியாயப்படுத்தப்பட்டு, கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்வதன் மூலமும், அவற்றுக் கான பாதுகாப்புகளை வலுப்படுத்த வேண்டும்.

4. பொருத்தமான மயக்க மருந்து மற்றும் வலி நிவாரணம், மனிதாபி மான நிலைகள், பொருந்தக்கூடிய இடங்களில் மறுவாழ்வுத் தேவைகள் மற்றும் வசதிகளின் கண்காணிப்பு மற் றும் முன்னறிவிப்பில்லாத உள்ளிட்ட, திறமையான அமல்படுத்தக்கூடிய இறுதி ஆராய்ச்சி ஆய்வுகள் விலங்கு நலத் தரநிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.

5. அறிவியல் ரீதியாக உறுதிப்படுத் தப்பட்ட விலங்குகள் அல்லாத ஆராய்ச்சி முறைகளின் வளர்ச்சி மற் றும் பயன்பாட்டை ஊக்குவிக்க, இதற்கெனத் தனிப்பட்ட நிதி ஒதுக் கீடு, நிறுவனக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் அறிவியல் ரீதியாகச் சாத்திய மான இடங்களில் விலங்குகள் மீதான பரிசோதனைகளைக் குறைத்து, படிப் படியாக மாற்று முறைகளால் அவற்றை முழுமையாக மாற்றுவதற் கான தெளிவான தேசியத் திட்டம் ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.

அறிவியல் முன்னேற்றமும் விலங் குகள் நலனும் ஒன்றிணைந்து முன் னெடுக்கப்பட வேண்டும். ஒன்று மற்றொன்றிற்குத் தடையாக இருப்ப தாக கருதப்படக் கூடாது. தற்போ துள்ள சட்டத்தின் கீழ் விலங்குகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பில் இடை வெளிகளை உருவாக்குவதற்குப் பதி லாக, நம்பிக்கையை ஏற்படுத்துவதற் காக, ஒழுங்குமுறை சீர்திருத்தமானது நெறிமுறை சார்ந்த ஆராய்ச்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலுப் படுத்த வேண்டும்.

முன்மொழியப்பட்ட விதிகளை அவற்றின் தற்போதைய வடிவத்திலி ருந்து திரும்பப் பெறவும், விலங்குகளைப் பாதுகாப்பதோடு நம் பகமான மற்றும் அறிவியல் பூர்வ மான ஆராய்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் ஒரு கட்டமைப்பை உரு வாக்க, வெளிப்படையான, ஆதார அடிப்படையிலான கலந்தாய்வு செயல்முறையைத் தொடங்கவும் தாங்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்.டி.சேகர் தலைமை! மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர்

பெரம்பூர் த.ஆறுமுகம் இல்ல மணவிழா வரவேற்பு! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, அக். 24 – மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர் – பெரம்பூர் 44வது வட்டக் கழகச் செயலாளர் பெரம்பூர் த.ஆறு முகம் – ஆ.இராஜலட்சுமி ஆகி யோரின் புதல்வி ஆ.தமிழ் பொன் னிக்கும் சென்னை கோடம் பாக்கம் வி.குமார் – கே.ரமாதேவி ஆகியோரின் புதல்வர் கே.விக் னேஷ்க்கும் மணவிழா நாளை (25.10.2026 ஞாயிறு) காலை 9 மணியளவில் மூலக்கடை ஜங்ஷ னில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று (24.10.2026 சனிக் கிழமை) மாலை 6 மணியளவில் மூலக்கடை ஜங்ஷனில் அமைந் துள்ள ஸ்ரீ வள்ளி மகாலில் நடை பெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழா வரவேற்புக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் தலைமை வகிக்கிறார்.

கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம், தா.இளைய அருணா, பி.டி.சி. ஜி.செல்வராஜ், பி.டி.சி.வெ.பாலு, க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின் றனர்.

இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கம லக்கண்ணன், வி.தயாளன், டி.கமலக்கண்ணன், அ.தமிழ்ச் செல்வன், ப.மதிவாணன், வி.அமுலு, நா.சேகர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செய லாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மண மக்களை வாழ்த்துகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கே.என்.நேரு எம்.எல்.ஏ., ஆ.இராசா எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், அன்பகம் கலை, மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ., தங்கம் தென்ன ரசு எம்.எல்.ஏ., தா.மோ.அன்பர சன், சா.சி.சிவசங்கர், ஆவடி சா.மு.நாசர், கோவி செழியன் எம்.எல்.ஏ., இரா.கிரிராஜன் எம்.பி., எஸ்.ஆ.ஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, நே.சிற்றரசு, மயிலை த.வேலு, கனிமொழி என்.வி.என்.சோமு, புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா, ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ். முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால், ப.ரங்கநாதன், ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா. மூர்த்தி, இ.பரந்தாமன், கே.எஸ். இரவிச்சந்திரன், ஜோசப் சாமு வேல், கே.பி.சங்கர், மேயர் பிரியா, துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாநகர் போக்குவரத் துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் இவ்விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் - தொகுதி மறு சீரமைப்புக் கூட்டங்கள்!

கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - தங்கப்பாண்டியன் - இளையராஜா பங்கேற்பு!

சிவகங்கை, அக். 24-

கழகத் தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மாவட்டம் தோறும் கழகத்தை மறுசீரமைப்பதற்கான பணி கள் நடைபெற்று வருகின்றது. இதற்காக மாவட்டம் தோறும் தலைமைக் கழகத்தால் மறுசீர மைப்பு பார்வையாளர்கள் நிய மிக்கப்பட்டுள்ளார்கள். சிவ கங்கை மாவட்டத்திற்கு முன்னாள் எம்.எல்.ஏ. தங்கப் பாண்டியன், மாநில இளைஞ ரணி துணை அமைப்பாளர்கள் இளையராஜா ஆகியோர் நிய மிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முதற்கட்ட மாக சட்டமன்றத் தொகுதி அளவில் நடைபெற்ற கூட்டங்களில் பங்கேற்று ஒன் றிய நகர பேரூர் கழகங்களில் மேற்கொள்ள வேண்டிய மறுசீ ரமைப்பு குறித்து விளக்கி கூறி னார்கள். தொடர்ந்து கடந்த 14ம்தேதி முதல் 17ம்தேதி வரை ஒன்றிய, நகர், பேரூர் கழகங்க ளின் நிர்வாகிகள் பங்கேற்று கூட்டத்தில் கலந்து கொண்ட னர். அவர்களிடம் வார்டு மறுசீ ரமைப்பு குறித்த படிவங்களை வழங்கினார்கள். அதன்படி சிவ கங்கை மாவட்டத்திற்கு முன் னாள் எம்.எல்.ஏ .தங்கபாண்டி யன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இளைய ராஜா ஆகியோர் மறுசீரமைப் புப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை விளக்கமாக கூறினார்கள். கடந்த நான்கு தினங்களாக சிவ கங்கை மாவட்டத்தில் உள்ள சிங்கம்புணரி வடக்கு, தெற்கு, எஸ்.புதூர் பாரி வள்ளல் ஒன்றி யம், திருப்பத்தூர் வடக்கு, தெற்கு, கல்லல் கிழக்கு,மேற்கு, சாக்கோட்டை கிழக்கு ,மேற்கு, தேவகோட்டை வடக்கு, தெற்கு , கண்ணங்குடி ஒன்றியம் , காளையார்கோவில் கிழக்கு, தெற்கு, வடக்கு, இளையான் குடி கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு, சிவகங்கை தெற்கு, வடக்கு, மேற்கு, மானாமதுரை கிழக்கு, மேற்கு, திருப்புவனம் கிழக்கு, மேற்கு மற்றும் சிவ கங்கை மானாமதுரை தேவ கோட்டை ஆகிய நகரங்கள், காரைக்குடி மாநகராட்சி, பேரூர் கழகங்களில் சிங்கம்புணரி, திருப்பத்தூர், நெற்குப்பை, கோட்டையூர், கண்டனூர், பள்ளத்தூர், கானா டுகாத்தான், இளையான்குடி, திருப்புவனம், நாட்டரசன் கோட்டை, புதுவயல் உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகி களுடன் தொகுதியில் மறுசீர மைப்பு குறித்த ஆலோசனை நடத்தினார்கள். ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களிடம் வார் டுகள் பிரிப்பது வார்டுகளை சேர்ப்பது குறித்த விவரங்களை கேட்டறிந்தார்கள். அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை வழங்கினார்கள்.

ஒன்றிய, நகர, பேரூர் செய லாளர்கள் கூறிய கருத்துகளை மாநில தலைமைக்கு தெரி வித்து அதன்பின் முடிவெடுக்கப்படும் என்று தெரி வித்தார்கள். இந்த ஆலோ சனைக் கூட்டத்திற்கு முன் னாள் அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை தாங்கினார். மாநில இலக்கிய அணி புரவலர் முன் னாள் அமைச்சர் மு.தென்ன வன், தொகுதி மறு சீரமைப்பு மாவட்ட பார்வையாளர்கள் முன்னாள் எம்.எல்.ஏ. தங்கப் பாண்டியன், மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் இளையராஜா, புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப் பாளர் க.சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முன்னாள் அமைச் சர் திருமதி தமிழரசி ரவிக்கு மார், மாவட்ட அவைத் தலை வர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுப.மதியர சன், எஸ்.மாரியப்பன் கென் னடி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், பொதுக் குழு உறுப்பி னர்கள் அம்பலமுத்து, எம். சோமசுந்தரம், ஜெ.மதார்சேட், ஒன்றியச் செயலாளர்கள் பூமணி, கே.பால சுப்பிரமணி யன், பி.செல்வராஜ், எஸ்.சண் முகவடிவேல், வடிவேல், விரா மதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், நா. நெடுஞ்செழியன், சுப. சின் னதுரை, நாகனி ரவி, வழக்கறி ஞர் வே.பூபால சிங்கம், லெ.மு. ர வி ச் ச ந் தி ர ன் ஆர்.எம்.கென்னடி, வே. ஆரோக்கியசாமி யோக. கிருஷ் ணகுமார், வே. தமிழ்மாறன் ஆறு.செல்வராஜன், கா.வெங் கட்ராமன், மா.அண்ணா துரை, துரை. ராஜாமணி, எம். ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், பெ.மந்த காளை, எம்.ஏ.கடம்பசாமி, திருமதி வசந்தி சேங்கைமாறன், ஒன் றிய துணைச் செயலாளர்கள் சிவபுரிசேகர், எஸ். முத்துக்குமார் நகர் கழகச் செய லாளர்கள் பெரி. பாலா, க. பொன்னுச்சாமி, காரைக்குடி மாநகரச் செயலாளர் நா.குண சேகரன், பேரூர் கழகச் செயலா ளர்கள் கதிர்வேல், கே.பி.எஸ். பழனி யப்பன், ராசு, அசோக், பி.ஏ.நஜ்முதீன் நாகூர் கனி, ஜெயராமன், பகுருதீன் அலிமு கமது, பிரம்மையா மற்றும் அந் தந்த ஊராட்சி ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

ஜோசப் விஜய் ஆட்சியில் தொடரும் கொடூரம்:

கல்லூரி மாணவிக்குப் பாலியல் சீண்டல்!

த.வெ.க. நிர்வாகி அட்டூழியம்!

கன்னியாகுமரி, அக்.24-

கன்னியாகுமரி மாவட்டம் குலசே கரம் பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவர், நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் எம்.ஏ. இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். அவருடன் மூலச்சல் பகு தியைச் சேர்ந்த த.வெ.க பெண் நிர் வாகி ஒருவரும் அதே கல்லூரியில் படித்து வருகிறார். இவர்கள் இருவ ரும் கல்லூரித் தோழிகள் ஆவர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இருவரும் கல்லூரியிலிருந்து வீட்டிற் குச் செல்ல பேருந்திற்காக நின்று கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாகக் காரில் வந்த தக்கலை மருந் துக்கோட்டை பகுதியைச் சேர்ந்த த.வெ.க மத்திய மாவட்ட செயற் குழு உறுப்பினர் கிறிஸ்டோபர் என் பவர், காரை நிறுத்தி, "நானும் அந்த ஊருக்குத்தான் செல்கிறேன், வாருங் கள்" என்று கூறி மாணவிகள் இரு வரையும் காரில் அழைத்துச் சென்றுள் ளார்.

பின்னர் த.வெ.க பெண் நிர்வா கியை மூலச்சல் பகுதியில் இறக்கிவிட் டுவிட்டு, காரில் இருந்த மற்றொரு மாணவியிடம் "நான் குலசேகரம் தான் செல்கிறேன், உங்களை அங்கு இறக்கிவிடுகிறேன்" எனக் கூறி அழைத்துச் சென்றுள்ளார். வழியில் மழை பெய்துகொண்டிருந்தபோது காரை நிறுத்தி, அந்த மாணவியிடம் அவர் பாலியல் சீண்டலில் ஈடுபட் டுள்ளார்.

இதனால் நிலைகுலைந்த மாணவி, அவரைத் திட்டித்தாக்க முயன்றதுடன், காரிலிருந்து குதித்துத் தப்பிக்கவும் முயற்சி செய்துள்ளார். இதனால் பயந்துபோன கிறிஸ்டோ பர், அந்தப் பெண்ணை அவரது வீட் டிற்கு அருகாமையில் இறக்கிவிட்டு விட்டுத் தப்பியோடியுள்ளார்.

வீட்டிற்குச் சென்ற கல்லூரி மாணவி நடந்த சம்பவத்தைப் பெற் றோரிடம் கூறியுள்ளார். மேலும், தனது கல்லூரித் தோழியான த.வெ.க பெண் நிர்வாகியிடமும் இதுகுறித்து அழுது புலம்பியுள்ளார்.

தனது கட்சிக்காரரால் தனது தோழிக்கு நேர்ந்த பாலியல் தொல்லை குறித்துப் போலீசில் புகார் செய்வோம் எனக் கூறி, அந்த மாண வியைக் கொற்றிக்கோடு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவர் புகார் அளித்துள்ளார்.

போலீசார் இதுகுறித்து விசா ரணை நடத்தி, கல்லூரி மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த கிறிஸ்டோபரைக் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். இத்தகவலை அறிந்து அங்கு வந்த த.வெ.க வழக்கறிஞர்களும் நிர்வாகி களும், வழக்கைப் பதிவு செய்யவிடா மல் தடுத்து, அதை வெறும் புகார் மனுவாக மட்டும் மாற்றியுள்ளனர்.

மேலும், மாணமியை மிரட்டி அவ ரது புகாரையும் வாபஸ் பெறச் செய் துள்ளனர். இதுகுறித்து விசாரணை நடத்த 'சிங்கப்பெண்' படையும் வர வில்லை. சிங்கமாய் வர வேண்டிய போலீசும் மௌனமாகிவிட்டது. இருப்பினும், தனக்கு இழைக்கப் பட்ட கொடுமைக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும், குற்ற வாளி மீது வழக்கப் பதிவு செய்து தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றும் அந்தப் பெண் உறுதியாக இருந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தக்கலை போலீசார், உதவுவது போல் நடித்துக் கல்லூரிப் பெண்ணிடம் உடல் ரீதி யான பாலியல் அத்துமீறலில் ஈடு பட்ட த.வெ.க நிர்வாகி கிறிஸ்டோ பர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

த.வெ.க ஆட்சியில் இதுபோன்ற ஒரு கொடுமை குமரி மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள நிலையில், முதல்வரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறை, கட்டப்பஞ்சாயத்து செய்து இந்தப் பிரச்சினையை இல் லாமல் ஆக்க முயற்சித்த சம்பவம், குற்றவாளிக்கு உதவும் காவல்துறை மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

முரசொலியில் பணிபுரியும்

சி.காசி இல்ல மணவிழா வரவேற்பு!

இன்று நடைபெறுகின்றது!

சென்னை, அக்.24-

முரசொலியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரி யும் சி.காசி - கே.நளினி ஆகி யோரின் புதல்வர் கே.விஸ் வநாத் - எம்.லாவண்யா ஆகியோரின் மணவிழா நாளை (25.10.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணிக்கு, சென்னை, திருவள்ளூர் நெடுஞ்சாலை, திருமழிசையில் அமைந் துள்ள ஜி.கே.ஆர். மஹா லில் நடைபெறுகின்றது.



இன்று மணவிழா வரவேற்பு

முன்னதாக மணவிழா வரவேற்பு இன்று (24.10.2026 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு நடை பெறுகின்றது. இம்மண விழா மற்றும் மணவிழா வர வேற்பில் கழக முன்னணி யினர், உற்றார், உறவினர் கள் கலந்துகொண்டு மண மக்களை வாழ்த்துகின்ற னர்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை வி.சந்திரன், சி.லதா, சி.பன்னீர்செல்வம், சி.ஓவியா டி.பழனி, பி.ரம்யா, எம்.விமலா, முனு சாமி, எம்.பாலாஜி, ஆகி யோர் வரவேற்கின்றனர்.